# THE COVAI MAIL

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 8 Issue No. : 36 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Dec 5-11, 2021, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-






The only DTCP approved affordable plots at **Sulur** in a gated plot community with **20+ amenities**

LAUNCHING PHASE 1

G SQUARE SPRINGFIELDS

SULUR

(1 min from Trichy Main Road)

**RESIDENTIAL PLOTS**

LAUNCH PRICE ~~₹36 L~~

EARLY BIRD PRICE ₹35 L* ONWARDS

(FOR FIRST 20 BOOKINGS)

**COMMERCIAL PLOTS FROM**

₹4.12 Cr

**Inside the Budget**

| | | |
|---|---|---|
| Elite Plots | - | ₹16 L - ₹20 L |
| Premium Plots | - | ₹24 L - ₹30 L |
| King-Sized Plots | - | ₹35 L - ₹56 L |
| Commercial Plots | - | ₹4.12 Crs |

**Inside the City**

AVINASHI ROAD 7 mins (1/3rd Price)

SINGANALLUR 10 mins (1/3rd Price)

G SQUARE SPRINGFIELDS SULUR

ONDIPUDUR 7 mins (1/2 Price)

TRICHY MAIN ROAD 1 min (1/2 Price)

**SALIENT FEATURES**

- Just 186 residential plots & 7 commercial plots spread across 12.3 acres
- 20+ amenities like Basketball court, amphitheatre, aroma garden, etc.
- Plug-n-play plots with water and electricity connection
- Well-laid blacktop internal roads with street lights
- Perfect documentation
- DTCP approved and RERA registered plots

*T & C Apply

Rera No: TN/11/Layout/0475/2021 | www.rera.tn.gov.in

89396 50004

www.gsquarehousing.com

SBI HDFC

G SQUARE GROUP EXPERIENCE PLOT PERFECTION

# பி.எஸ்.ஜி முன்னாள் மாணவர்கள் சந்திப்பு...



பி.எஸ்.ஜி தொழில் நுட்பக் கல்லூரியில் 1961 ஆம் ஆண்டு டிப்ளமோ படித்து முடித்த முன்னாள் மாணவர்களின் வைரவிழா ஆண்டு சந்திப்பு நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முன்னாள் மாணவர்கள், அவர்களது குடும்பத்தினர், பி.எஸ்.ஜி தொழில்நுட்பம் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர்கள், முன்னாள் மாணவர்கள் சங்கத் தலைவர் நந்தகுமார் மற்றும் பேராசிரியர்கள்.

## ஜன 2ல் கோவை விழா...




கோயம்புத்தூர் விழா நிகழ்ச்சிகள் ஜனவரி 2ம் தேதி தொடங்கி ஜனவரி 9 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. கோவை மாவட்ட ஆட்சியர் சமீரன் மற்றும் மாநகராட்சி ஆணையர் ராஜகோபால் சுங்கரா விழாவினை தொடங்கி வைத்தனர். உடன், சீமா தலைவர் கார்த்திக், டைனமிக் நடராஜன், கொடிசியா தலைவர் ரமேஷ் பாபு, சி.ஐ.ஐ தலைவர் நந்தினி ரங்கசாமி, கோவை மாநகர துணை ஆணையர் ஷர்மிளா, யங் இந்தியா தலைவர் ஜெய பிரசாத், கோவை விழாவின் தலைவர் அஸ்வின் மனோகர், ரோட்டேரியன் மாருதி ஆகியோர் விழாவிற்கான மேஸ்காட் எனப்படும் சின்னத்தை அறிமுகப்படுத்துகிறார்கள்.

## ஸ்ரீ ராமகிருஷ்ணாவில் விளையாட்டரங்கம் திறப்பு



ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில், சர்வதேச தரத்திலான பேட்மிண்டன் உள் விளையாட்டரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாராயணசுவாமி தலைமை வகித்து, விளையாட்டு அரங்கைத் திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து சர்வதேச அளவிலான பேட்மிண்டன் போட்டியில் வென்ற, ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி மாணவர்களை நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாராயணசுவாமி, இணை நிர்வாக அறங்காவலர் சுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

### பேட்டரி மூலம் இயங்கும் இ பைக்:

## என்.ஜி.பி மாணவர்களின் கண்டுபிடிப்பு

தி கோவை மெயில்

என்.ஜி.பி தொழில்நுட்பக் கல்லூரி மெக்கானிக்கல் பிரிவு மாணவர்கள் மின்சார பேட்டரி மூலம் இயங்கும் கிராவிற்றான் என்ற இ பைக்கை உருவாக்கி வடிவமைத்துள்ளார்கள்.

கல்லூரியின் தலைவர் நல்ல ஜி.பழனிசாமி, செயலாளர் தவமணி பழனிசாமி, முதன்மை செயலாளர் புவனேஸ்வரன், மற்றும் கல்லூரியின் முதல்வர் பிரபா, மற்றும் கல்லூரியின் மெக்கானிக்கல் துறைத் தலைவர் நந்தகுமார் ஆகியோரின் வழிகாட்டுதலில் கல்லூரியின் நான்காம் ஆண்டு மாணவர்கள் கிரிப்பின் சிங், கோகுலகிருஷ்ணன், தீன் பிரதீமன் ஆகியோர்களால் இந்த வாகனம் உருவாக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களின் எண்ணக் கனவுகளை செயலாக்கும் பொருட்டு இந்த இ பைக் உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உபயோகத்தில் உள்ள மின்சார பேட்டரி வாகனங்களில் திரவ குளிரூட்டும் அமைப்பு இல்லை. மற்ற பேட்டரி வாகனங்களைப் போல் அல்லாமல் இதில் திரவ குளிரூட்டும் அமைப்பு பொருத்தப்பட்டு மோட்டாரின் வெப்பம் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பேட்டரியின் அதிகபட்ச திறன் தொடர்ச்சியாக கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த கிராவிற்றான் இ பைக் 80 கிலோமீட்டர் வேகத்தில் இயக்க முடியும். மிகக் குறைந்த நேரத்தில் அதாவது 2 1/2 மணி நேரத்திற்குள் முழுமையாக சார்ஜ் ஆகிவிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒருமுறை சார்ஜ் செய்தால் குறைந்த பட்சம் 50 கிலோமீட்டர்கள் வரை இடைவிடாமல் இயங்கக் கூடியது. மேலும் இந்த வாகனத்தின் மூலம் காற்று மாசுபடுதல் முற்றிலும் குறைக்கப்பட்டுள்ளது.



மின்சார பேட்டரி மூலம் இயங்கும் கிராவிற்றான் என்ற இ பைக்கை உருவாக்கி வடிவமைத்துள்ள மாணவர்களுடன் கல்லூரியின் செயலாளர் தவமணி பழனிசாமி, கல்லூரியின் முதல்வர் பிரபா மற்றும் மெக்கானிக்கல் துறைத் தலைவர் நந்தகுமார்.

# குடும்பத்திலிருந்து கொண்டே ஆன்மீகத்தில் ஈடுபட முடியுமா?

தி கோவை மெயில்

**ஆன்மீகம் என்றால் கைகளில் விளக்கையோ, மணியையோ, பூவையோ வைத்துக்கொண்டு ஏதாவது பண்ணுவது அல்ல. கடவுள்மீது பக்தி என்று செய்யப்படும் நாடகங்கள் அல்ல. பக்கத்தில் இருக்கும் உயிரை மதிக்கத் தயாராக இல்லாமல், அதைப் படைத்தவனைப் பற்றிய கற்பனைகளை மட்டும் மதிக்கும் செயல் அல்ல.**

*கேள்வி:சத்குரு, எனக்கு யோகா, பிராணாயாமம் போன்ற ஆன்மீகப் பயிற்சிகளில் ஈடுபட வேண்டும் என்ற ஆவல் உள்ளது. ஆனால், 'ஒரு குடும்பப் பெண் இதையெல்லாம் செய்தால், கணவனிடம் இருந்து விலகிவிடுவாள். 60 வயதுக்குப் பிறகு ஆன்மீகத்திற்குப் போகலாம்' என்று என் கணவர் எச்சரிக்கிறார்.*

*எனக்கு ஆன்மீகமும் வேண்டும், இல்லறமும் வேண்டும், என்ன செய்வது?*

**சத்குரு:**

உடல் திடமாக இருக்கும்போது, சிறுசிறு இன்பங்களை நாடுவதற்கு மட்டும் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். உடல் வேறு எதற்கும் லாயக்கு இல்லாமல் போகும்போது, ஆன்மீகத்தில் அதை ஈடுபடுத்தலாம் இப்படி ஒரு கலாச்சாரம் உலகத்தில் வளர்ந்துவிட்டது.

உடல் ஒழுங்காக இயங்க முடியாதபோது, சாப்பிட முடியாது. சாப்பிட்டால் ஜீரணிக்க முடியாது. உட்கார்ந்தால் நிற்கமுடியாது. நின்றால் உட்காரமுடியாது. அப்போதுதான் ஆன்மீகமா? என்ன கணக்கு இது?

இளம்வயதில் யோகா செய்வதால், வாழ்க்கைமீது விரக்தி வந்துவிடாது. மாறாக, வாழ்க்கையின்மீது முழுமையான காதல்தான் பிறக்கும்.

*ஆன்மீகம் குடும்பத்தில் இருந்து உங்களை விலக்கிக்கொண்டு போய்விடும் என்று உங்கள் கணவர் சொல்கிறாரே...*

தங்களைச் சேர்ந்தவர் மேன்மை அடையக்கூடிய வாய்ப்பைப் பற்றிக் கவலைப்படாமல், மனைவி என்பவளை வேலை செய்யும் இயந்திரமாக, சுகம் தரும் சொந்தமாக மட்டும் நினைப்பவருடன் வாழ்க்கையை நடத்தும் அமைப்பைக் குடும்பம் என்று எப்படி அழைப்பது?

குடும்பம் என்றால் ஒருவருக்கு ஒருவர் பங்களிப்பது, பகிர்ந்துகொள்வது.

கணவன் மனைவி இருவரும் அடுத்தவர் பற்றிய அக்கறையில் முழுமையாக இருக்க வேண்டாமா? இருவரும் இணைந்து மனதார ஒரு திசையில் பயணம் செய்ய வேண்டாமா? குடும்பப் பொறுப்பை விரும்பி ஏற்றுக்கொண்டதால் பெண்கள் மேன்மையான விஷயங்களுக்கு ஆசைப்படக்கூடாதா?

**சங்கரன்பிள்ளையின் கண்ணாடி...**

'என்னிடம் மூன்று கண்ணாடிகள் இருக்கின்றன. ஒன்று கிட்டப்பார்வைக்கு, ஒன்று தூரப் பார்வைக்கு' என்றார் சங்கரன்பிள்ளை.

'மூன்றாவது...?' 'மற்ற இரண்டு கண்ணாடிகளைத் தேடுவதற்கு' என்றார் சங்கரன்பிள்ளை.

இப்படிப்பட்ட தேவைகளோடு இருப்பவரா உங்கள் கணவர்? அதனால்தான் உங்களை, உங்கள் நன்மைக்காகக்கூட விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லையா?

ஆன்மீகப் பயணம் மேற்கொள்வதால், கணவரைவிட்டுப் பிரியவேண்டும் என்று எந்த நிபந்தனையும் இல்லை.

**ஆன்மீகம் என்றால்...**

ஆன்மீகம் என்றால் கைகளில் விளக்கையோ, மணியையோ, பூவையோ வைத்துக்கொண்டு ஏதாவது பண்ணுவது அல்ல. கடவுள்மீது பக்தி என்று செய்யப்படும் நாடகங்கள் அல்ல. பக்கத்தில் இருக்கும் உயிரை மதிக்கத் தயாராக இல்லாமல், அதைப் படைத்தவனைப் பற்றிய கற்பனைகளை மட்டும் மதிக்கும் செயல் அல்ல. ஆன்மீகம் என்பது, அடிப்படையில் நமக்கு உள்ளே நடக்கும் பயணம். அதற்குக் குறுக்கே எப்பேர்ப்பட்ட உறவும் வந்து மறிக்க முடியாது.

நீங்கள் சினிமா போக வேண்டும் என்றால், கூடாது என்று நிறுத்தலாம். தினம் கேட்கவில்லை, மூன்று நாளைக்கு ஒன்றுதான் கேட்கிறேன் என்று பெருந்தன்மையுடன் சொன்னால்கூட, புடவை வாங்கப் போவதைத் தடுக்கலாம். கோயில் போகிறேன் என்றால், குறுக்கே விழுந்து மறிக்கலாம். கைலாச மலை ஏறப்போகிறேன் என்று சொன்னால், அந்த மலையையே மறைப்பதுபோல் நின்று மறிக்கலாம். கணவனோ, மனைவியோ, மாமியாரோ, நாத்தனாரோ யாரோ உங்களை இப்படியெல்லாம் தொந்தரவு செய்யலாம். அதெல்லாம் ஆன்மீகத்தின் பிரச்சினை அல்ல... குடும்பத்தின் பிரச்சினை. இதையெல்லாம் எப்படித் தீர்த்துக்கொள்ள வேண்டுமோ, அப்படித் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆனால் உள்நோக்கிப் பயணம்செய்ய நீங்கள் முடிவுசெய்தால், வெளியில் இருப்பவர்களில் யாரை அது குறுக்கிடப்போகிறது? அல்லது வெளியில் இருக்கும் யாருடைய அனுமதி தேவை அதற்கு? உள்ளே நீங்கள் எப்படி இருக்கப்போகிறீர்கள் என்பதைத் தீர்மானிக்க, வெளியில் இருக்கும் யாருக்கும் எந்த அதிகாரமும் கிடையாது, சக்தியும் கிடையாது.

குடும்பத்தில் பிரச்சினை என்றால், அந்தச் சூழ்நிலைகளை நீங்களே சரிப்படுத்திக்கொள்வது எப்படி என்று பார்க்கவேண்டும். சரிப்படுத்தக்கூடிய சூழ்நிலையே இல்லை என்றால், வேறு என்ன செய்யவேண்டும் என்பதையும் நீங்கள்தான் முடிவுசெய்ய வேண்டும்.

**மனைவியுடன் சண்டையா?**

இப்படித்தான், சங்கரன்பிள்ளைக்கும் அவர் மனைவிக்கும் ஒருநாள் பெரிய சண்டை வெடித்தது. உலகயுத்தம் அளவுக்கு அது போய்விட்டது.

சங்கரன்பிள்ளை விரக்தியுடன் கால்போன போக்கில் நடந்தார். ஊர் எல்லையைத் தாண்டி நடந்தார். வெகுதொலைவு நடந்தபிறகு ஒரு மரத்தடியில், சாது ஒருவர் அமர்ந்து இருப்பதைக் கவனித்தார். அந்தச் சாதுவின் முகத்தில் அத்தனைச் சந்தோஷம், அபார அமைதி. சங்கரன்பிள்ளை அவரை வணங்கினார்.

'ஐயா, வீட்டில் என் மனைவி ரொம்பப் பிரச்சினை பண்ணுகிறாள். உட்கார்ந்தால் தப்பு, நின்றால் தப்பு என்று வாட்டி எடுக்கிறாள். பேசாமல் இருந்தால், ஊமையா என்று கத்துகிறாள். பேசினால், எதிர்த்துப் பேசுகிறாயா என்று புரட்டி எடுக்கிறாள். நிம்மதி இழந்து அல்லாடுகிறேன். அவளைச் சமாளிப்பதற்குச் சுலபமான வழி எதாவது இருந்தால், சொல்லிக்கொடுங்களேன்' என்று பணிவுடன் கேட்டார்.

அந்த சாது சங்கரன் பிள்ளையைப் பரிதாபமாகப் பார்த்தார். 'அடப்போடா, முட்டாள்! எனக்கு அந்தச் சுலபமான உபாயம் தெரிந்து இருந்தால், நான் எதற்கு இப்படிச் சந்நியாசம் வாங்கிக்கொண்டு வந்து உட்காரப் போகிறேன்?' என்றார்.

இப்படிச் சண்டையிட்டுக் கொண்டு ஒருவரைவிட்டு ஒருவர் விலகுவதைவிட, ஆன்மீகத்திற்காக விலகினால் எவ்வளவு நன்றாக இருக்கும். (சிரிக்கிறார்)

உங்களுக்கு முழுமையான உயிரோட்டத்துடன் இருக்க வேண்டும் என்று ஆசையா? அல்லது அரைகுறை உயிரோட்டத்துடன் வாழ்ந்தால் போதுமா? சாவதற்குள், பிரபஞ்சத்தையே முழுமையாக உணர்ந்து பார்க்க முடியாவிட்டாலும், வாழ்க்கையின் அத்தனை பரிமாணங்களையும் தெரிந்துகொள்ள ஆசையா, இல்லையா? அந்த நோக்கம் இருந்தால், அதுதான் ஆன்மீகம். பாதி உயிராகவே வாழ்ந்துவிட்டுப் போய்ச்சேரலாம் என்று நினைத்துவிட்டால், அது லௌகீகம்.

ஒவ்வொரு தனிமனிதரும் தான் எப்படி மேன்மையான நிலைக்குப்போவது என்பதில் கவனம் வைப்பதால், கடமையிலிருந்து தவறியவராக மாட்டார். உங்கள்மீது கணவர் மெய்யான அன்புடன் இருந்தால், அதை எதிர்க்காமல், சந்தோஷமாக உதவுவார்.

ஒருவர் உன்னத நிலையை உணர்ந்துவிட்டால், அந்த ஆனந்தம் அவரை மட்டும் உய்விக்கப் போவது இல்லை.

அவரைச் சுற்றியுள்ள அத்தனைப் பேரையும் அது மேல்நிலைக்குக் கொண்டுச் செல்லும். இதை உங்கள் கணவர் புரிந்து கொள்ளட்டும்!"



ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேடரிங்

THE COVAI MAIL
RNI: TNBIL/2014/55455.
ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER
Postal Reg.No: CB/123/2021-23.

SREE Annapoorna SREE Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

Vol No. : 8 Issue No. : 36 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Dec 5-11, 2021, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

# முடிவில்லாத வாரிசு அரசியல்!













சாணக்கியன்
தி கோவை மெயில்

வாரிசு அரசியல் விவகாரத்தை பிரதமர் மோடி கையில் எடுத்திருப்பதன் மூலம் மீண்டும் இது குறித்து நாடு முழுவதும் விவாதம் எழுந்துள்ளது.

இந்தியாவின் மக்களாட்சி ஜனநாயகம் மீண்டும் மன்னராட்சி முறையை நோக்கி மெதுவாக அரசியல் கட்சிகள் நகர்த்துகின்றனவா என்னும் அளவுக்கு சந்தேகம் எழுந்துள்ளது. எங்கள் கட்சியில் வாரிசு அரசியல் என்ற பேச்சுக்கே இடமில்லை என மேடைகளில் ஆக்ரோஷமாகப் பேசி, கட்சிகளை தொடங்கியவர்கள் எல்லாம் பிற்காலத்தில் தலைவர் நாற்காலியை மகன்களுக்கு அளித்தது தான் இந்திய அரசியலின் தொடர் கதைகள். என்னதான் புதிய சித்தாந்தங்களைப் பேசி அரசியல் கட்சிகளைத் தொடங்கினாலும், வாரிசு அரசியல் என்பதை மட்டும் பெரும்பான்மையான கட்சிகள், தங்களின் எழுதப்படாத கொள்கையாகவே வைத்திருக்கின்றன.

தேசிய அரசியலைப் பொறுத்தவரை வாரிசு அரசியலுக்கு முதலில் பிள்ளையார்சுழி போட்டது காங்கிரஸ் கட்சி தான். நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கு பிறகு, அடுத்தடுத்து சில பிரதமர்கள் வந்தபோதும், ஒரு கட்டத்தில் இந்திரா காந்தியை பிரதமராக்கி முதல் முறையாக வாரிசு அரசியலை அறிமுகம் செய்தது காங்கிரஸ். இந்தியாவின் இரும்புப் பெண்மணியாக உருவெடுத்த இந்திரா காந்தி திடீரென அகால மரணம் அடைந்த நிலையில், விமான ஓட்டியாக இருந்த ராஜீவ் காந்தியைப் பிரதமராக்கி மீண்டும் வாரிசு அரசியலை உறுதி செய்தது காங்கிரஸ்.

பின்னர் ராஜீவ் காந்தி மக்கள் செல்வாக்கைப் பெற்று யாரும் அசைக்க முடியாத அளவுக்கு பெரும்பான்மையான மக்களவைத் தொகுதிகளைப் பெற்று அறுதிப் பெரும்பான்மையுடன் பிரதமர் பதவியை கைப்பற்றினார். வாரிசு அடிப்படையில் அரசியல் களத்துக்கு வந்த ராஜீவ் காந்தி மக்களின் அபிமானத்தைப் பெற்று மக்கள் சக்தியாக மாறினார். ராஜீவ் காந்தி படுகொலை சம்பவத்துக்குப் பின் 1991 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற்ற போதும் பிரதமர் பதவிக்கு வர சோனியா காந்தி விரும்பவில்லை. காங்கிரஸ் கட்சியில் கூட எவ்வித பொறுப்புக்கும் வர மறுத்துவிட்டார்.

காங்கிரஸ் தோல்வி வளையத்தில் இருந்தபோது மீண்டும் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பேற்ற சோனியா காந்தி, காங்கிரசை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தினார். அப்போது பிரதமர் பதவியை வகிக்க சோனியா காந்தியே விரும்பியபோதும் அவரால் பதவியேற்க முடியாத சூழல் உருவானது. தொடர்ந்து இருமுறை காங்கிரசை ஆட்சிக்கட்டிலில் அமர்த்திய சோனியா காந்தி, ராகுல் காந்தியை அறிமுகப்படுத்தி மீண்டும் வாரிசு அரசியலை உறுதிப்படுத்தினார். ஆனாலும், இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, சோனியா காந்தி ஆகியோரால் மக்களிடம் பெற்ற செல்வாக்கை ராகுல் காந்தியால் இதுவரை பெற முடியவில்லை.

> **எங்கள் கட்சியில் வாரிசு அரசியல் என்ற பேச்சுக்கே இடமில்லை என மேடைகளில் ஆக்ரோஷமாகப் பேசி, கட்சிகளை தொடங்கியவர்கள் எல்லாம் பிற்காலத்தில் தலைவர் நாற்காலியை மகன்களுக்கு அளித்தது தான் இந்திய அரசியலின் தொடர் கதைகள்**













**பாஜகவில் வாரிசு அரசியல்:**

வாரிசு அரசியல் பற்றி பேசும் பாஜகவும், வாரிசு அரசியல் சுழலில் சிக்காமல் இருந்ததில்லை. காங்கிரஸில் கட்சித் தலைமையை வாரிசு அரசியல் ஆக்கிரமிக்கிறது என்றால் பாஜகவில் இரண்டாம் கட்டத் தலைவர் பொறுப்புகளில் வாரிசு அரசியல் வாடை வீசுகிறது.

ராஜஸ்தான் மாநில முன்னாள் முதல்வர் வசுந்தரா ராஜே மகன் துஷ்யன்சிங் இப்போது மக்களவை உறுப்பினராகவும், மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், மகன் பங்கஜ்சிங் எம்.எல்.ஏ.வாகவும், முன்னாள் மத்திய அமைச்சர் பிரமோத் மகாஜன், மகள் பூனம் மகாஜன் எம்.பி.யாகவும் உள்ளனர். மேலும், மகாராஷ்டிரா மாநில முன்னாள் துணை முதல்வர் கோபிநாத் முண்டேவின் மகள் பங்கஜா முண்டே மாநில அமைச்சராக இருந்தார். இப்போது கட்சியில் தேசிய செயலராகவும் உள்ளார். மற்றொரு மகள் பிரீத்தம் முண்டே மக்களவை உறுப்பினராகவும் உள்ளார். எடியூரப்பா மகன் ராகவேந்திரா மக்களவை உறுப்பினராகவும் உள்ளார். முன்னாள் மத்திய அமைச்சர் வேத் பிரகாஷ் கோயலின் மகன் பியூஸ் கோயல் இப்போது மத்திய அமைச்சராக உள்ளார். முன்னாள் மத்திய அமைச்சர் மேனகா காந்தி, வருண் காந்தி ஆகியோர் இப்போதும் மக்களவை உறுப்பினராகவே தொடர்கின்றனர்.

**மாநில கட்சிகள்:**

அப்போதைய காஷ்மீரின் பிரதமராக பதவி வகித்த ஷேக் அப்துல்லாவின் மகன் பரூக் அப்துல்லா, பேரன் ஓமர் அப்துல்லா ஆகியோர் முதல்வர்களாக பதவி வகித்துள்ளனர். மக்கள் ஜனநாயக கட்சியை உருவாக்கிய முப்தி முகம்மது சயீத் முதல்வராகவும், அவரைத் தொடர்ந்து அவரது மகள் மெக்பூபா முப்தி முதல்வராகவும் தொடர்ந்தார்.உத்தர பிரதேசத்தில் முன்னாள் பிரதமர் சரண்சிங் மகன் அஜித் சிங் மத்திய அமைச்சராகவும், அவரது மகன் ஜெயந்த் சௌத்ரி மக்களவை உறுப்பினராகவும் உள்ளார். முன்னாள் முதல்வர் முலாயம்சிங் மகன் அகிலேஷ் யாதவ் முதல்வராக இருந்தார். அவரது குடும்பத்தில் கணக்கில் அடங்காத எண்ணிக்கை ஆட்சியிலும், கட்சியிலும் கோலோச்சினர். பீகாரில் லாலு யாதவ், அவரது மனைவி ராப்ரி தேவி, மகன்கள் தேஜஸ்வி யாதவ் துணை முதல்வர், தேஜ் பிரதாப் யாதவ் அமைச்சராகவும் பதவி வகித்தனர். மகள் மிசா பாரதி எம்.பியாக இருந்தார்.

ஹரியானாவைப் பொறுத்தவரை, முன்னாள் துணை பிரதமர் தேவிலால் மகன் ஓம்பிரகாஷ் சௌதாலா முதல்வராகவும், அவரது மகன் அபைசிங், அஜய் சிங் அமைச்சர்களாகவும், அஜய்சிங் சௌதாலா மகன் துஷ்யன் சௌதாலா ஜனநாயக ஜனதா கட்சி என தனிக்கட்சியை உருவாக்கி பாஜக கூட்டணியில் இப்போது துணை முதல்வராக தொடர்கிறார். காங்கிரஸ் கட்சியில் பூபேந்திரசிங் ஹூடா முதல்வராகவும், அவரது மகன் பிபேந்திரசிங் ஹூடா மாநிலங்களவை உறுப்பினராகவும் உள்ளனர். ராஜஸ்தானில் ராஜேஷ் பைலட் மகன் சச்சின் பைலட் துணை முதல்வராக இருக்கிறார்.

மகாராஷ்டிராவில் சரத்பவார் மகள் சுப்ரியாசுலே மக்களவை உறுப்பினராக உள்ளார். அண்ணன் மகன் அஜித் பவார் துணை முதல்வராக உள்ளார். பால்தாக்கரே மகன் உத்தவ் தாக்கரே முதல்வராகவும், அவரது மகன் ஆதித்ய தாக்கரே மாநில அமைச்சராகவும் உள்ளார். ஒடிசாவில் முன்னாள் முதல்வரான பீஜு பட்னாயக் மகன், நவீன் பட்நாயக் முதல்வராக உள்ளார்.

**தென்னிந்தியா:**

முன்னாள் பிரதமர் தேவ கௌடாவின் இளைய மகன் குமாரசாமி முதல்வராகவும், அவரது முதல் மனைவி அனிதா குமாரசாமி எம்.எல்.ஏ. வாகவும் பதவி வகித்துள்ளனர். தேவ கௌடாவின் மூத்த மகன் ரேவண்ணா அமைச்சராகவும், அவரது மகன் பிரஜ்வல் ரேவண்ணா மக்களவை உறுப்பினராக உள்ளார். குமாரசாமியின் மகன் நிகில் தேவ கௌடா கடந்த மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார்.

தேவகௌடாவைப் பொறுத்தவரை அவரது கட்சியோ சிறியது, ஆனால், குடும்ப வாரிசுகள் எண்ணிக்கையோ அதைவிட என சலிப்புத்தட்டும் அளவுக்கு வாரிசு அரசியலைத் திணித்துள்ளார்.

அதேபோல், நடந்து முடிந்த தேர்தலில் முதல்வர் வாய்ப்பைத் தவறவிட்ட சித்தராமையா தன் குடும்பத்திலிருந்து அடுத்த முதல்வரை உருவாக்கும் விதமாக தன்னுடைய மகன் யதீந்திராவை ஏற்கெனவே சட்டப்பேரவை உறுப்பினராக்கியுள்ளார்.

தனித் தெலங்கானாவை போராடி பெற்று முதல்வராக அரியணையில் அமர்ந்த சந்திரசேகர் ராவ் முதல்வராகவும், அவரது மகன் கே.டி.ராமாராவ் அமைச்சராகவும், மகள் கவிதா மேல்சபை உறுப்பினராகவும் தொடர்கின்றனர். ஆந்திர முன்னாள் முதல்வர் என்.டி. ராமாராவின் மருமகன் சந்திரபாபு நாயுடு முதல்வராக இருந்தார். சந்திரபாபு நாயுடு மகன் நரலோகேஷ் மேல்சபை உறுப்பினராக உள்ளார். ராமாராவின் மகன் பாலகிருஷ்ணா எம்.எல்.ஏ. வாக உள்ளார். மூத்த மகன் ஹரிகிருஷ்ணா மக்களவை உறுப்பினராக இருந்தார். மகள் புரந்தேஸ்வரி மத்திய அமைச்சராக இருந்தார். ஆந்திர முன்னாள் முதல்வர் ஒய்எஸ். ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன் மோகன் ரெட்டி தற்போது முதல்வராக உள்ளார். ராஜசேகர ரெட்டியின் தம்பி விவேகானந்த ரெட்டி மக்களவை உறுப்பினராக இருந்தார். ராஜசேகர ரெட்டியின் மகள் சர்மிளா ரெட்டி கட்சிப் பொறுப்பில் இருந்து அரசியல் செய்து வருகிறார்.

**தமிழகத்தில்....**

தமிழகத்தில் காங்கிரஸில் முக்கியப் பொறுப்பில் இருந்த முத்துரங்க முதலியாரின் மருமகன் பக்தவத்சலம் முதல்வராகப் பொறுப்பேற்றார். பக்தவத்சலத்தின் பேத்தி ஜெயந்தி நடராஜன் மத்திய அமைச்சராக இருந்துள்ளார். ராஜாஜி முதல்வராகவும், அவரது மகன் நரசிம்மன் மக்களவை உறுப்பினராக இருந்தார்.

குமாரமங்கலம் குடும்பத்தில் சுப்பராயன் முதல்வராகவும், அவரது மகன் மோகன் குமாரமங்கலம் மத்திய அமைச்சராகவும் இருந்தனர். பேரன் ரங்கராஜன் குமாரமங்கலம் தமிழ்நாடு காங்கிரஸ் மாநிலத் துணைத் தலைவராகவும் உள்ளார். பார்வதி கிருஷ்ணன் உள்பட இன்னும் சிலர் பல்வேறு அரசியல் கட்சிகளில் முக்கியப் பதவியில் இருந்துள்ளனர். முன்னாள் மத்திய அமைச்சர் திருநாவுக்கரசர் மகன் ராமச்சந்திரன் எம்.எல்.ஏ.வாகவும், ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மகன் திருமகன் ஈ.வெ.ரா எம்.எல்.ஏ. என பல காங்கிரஸ் தலைவர்களும் சளைத்தவர்கள் அல்ல. திமுக தலைவரான மு.கருணாநிதி முதல்வர், மகன் மு.க.ஸ்டாலின் முதல்வர், மூத்த மகன் மு.க.அழகிரி மத்திய அமைச்சர், மகள் கனிமொழி மக்களவை உறுப்பினர், ஸ்டாலின் மகன் உதயநிதி சட்டப்பேரவை உறுப்பினர். அன்பழகன் பேரன் அறிவழகன் எம்.எல்.ஏ. வாக உள்ளார். கருணாநிதியின் மருமகன் முரசொலி மாறன் மத்திய அமைச்சர், அவரது மகன் தயாநிதி மாறன் மத்திய அமைச்சர். திமுகவில் கருணாநிதி போல, பெரும்பாலான இரண்டாம் கட்டத் தலைவர்கள், மாவட்டச் செயலர்களின் வாரிசுகள் அரசியலில் இருக்கின்றனர்.

வாரிசு அரசியலுக்கு அதிமுகவும் விதிவிலக்கல்ல. அதிமுகவைப் பொறுத்த வரை ஓ.பி.ஸ். மகன் ரவீந்திரநாத் மக்களவை உறுப்பினராக உள்ளார். ஜெயக்குமார் மகன் ஜெயவரதன் மக்களவை உறுப்பினராக இருந்தார்.

பாமகவில் எங்களது குடும்பத்தில் இருந்து யாராவது பதவிக்கு வந்தால் என்னை முச்சந்தியில் வைத்து அடியுங்கள் என பேசிய ராமதாஸ், அவரது மகன் அன்புமணியை மாநிலங்களவை உறுப்பினராக்கி, மத்திய அமைச்சர் பதவியில் வைத்து அழகு பார்த்தார். இப்போது பாமகவின் எதிர்காலத் தலைவர் என்ற அடிப்படையில் அன்புமணியை உருவாக்கிவிட்டார். மேலும், திண்ணைப் பிரச்சாரம் செய்தாவது அன்புமணி ராமதாஸை முதல்வராக்கி விடவேண்டும் என்று தொண்டர்களிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார் ராமதாஸ்.

## தகுதி இருந்தால் மட்டுமே...

இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது, இந்தியாவின் வாரிசு அரசியல் என்பது வெகு காலமாகவே இருந்து வருகிறது. தலைவரின் மகனுக்கோ அல்லது இரண்டாம் கட்டத் தலைவர்களின் வாரிசுகளுக்கோ கட்சியில் இருக்கும் மற்றவர்களை விட அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

வாய்ப்பை மட்டும்தான் தலைவர்களால் பெற்றுக்கொடுக்க முடியுமே தவிர மக்கள் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு உழைக்க வேண்டியது அவசியம். முன்னாள் பிரதமர் அச்சாரம் சிங்கின் மகன் அஜித் சிங்கை மாநிலம் தழுவிய தலைவராக மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதேவேளை சங்கங்களின் சீடரான முலாயம் சிங் யாதவை ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் ஸ்டாலின் தன்னுடைய 50 ஆண்டு உழைப்பால் தலைவராக உயர்ந்துள்ளார். தகுதி இருந்தால் மட்டுமே ஒரு ஆண் வாரிசு அரசியலில் நிலை பெற முடியும் என்பது உண்மை.

இந்தியாவில் பொது வெளிகளில் வாரிசு அரசியலின் மீது அதிருப்தி, மக்களிடையே காணப்பட்டாலும் தேர்தல் வெற்றிகளில் அது பெரும்பாலும் வெற்றிக்கான வழிகளாகவே உள்ளது. இன்றைய சூழலில் வார்டு உறுப்பினரிலிருந்து பிரதம வேட்பாளர் வரை வாரிசுகளுக்கே வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

இது, சரி, தவறு என்பதைக் கடந்து சாதாரண பொதுமக்களுக்கும் தேர்தல் அரசியலில் இருந்த இடத்தை, இந்த வாரிசு அரசியல் முறை பறித்துள்ளது. பிறப்பின் அடிப்படையில் எங்களைப் புறக்கணிக்கக் கூடாது என வாரிசுகள் சொன்னாலும், அது மட்டுமே உங்களின் தகுதியில்லை என்பது பொதுமக்களின் கருத்துகளாக இருக்கின்றன. எது, எப்படியே தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கும் அதிகாரம் மக்களிடம் தான் உள்ளது.

வாரிசு அரசியலில் முதலிடம் பிடித்த காங்கிரஸில், ராஜீவ் காந்தி வெற்றி பெற்றுள்ளார். அதேநேரத்தில் ராகுல் காந்தியால் தந்தையைப் போல அரசியலில் ஜொலிக்க முடியவில்லை. மக்கள் ஏற்றுக்கொண்டால் தான் வாரிசுகள் கூட அரசியலில் வெற்றி பெற முடியும் என்பது தான் மறுக்க முடியாத உண்மை.

# Budding nurses receive the healing light!




*Dr. T. Nirmala, Principal, Dr. S. Girija Kumari, Vice Principal, Sri Ramakrishna College of Nursing, Dr. J. Karpagam, Chief Nursing Officer, Sri Ramakrishna Hospital with the Managing Trustee of SNR Trust & the students.*

The Covai Mail

The lamp lighting ceremony is considered an auspicious occasion in every Nurse's life, and it is also held as a tribute to Florence Nightingale, the source of Modern Nursing.

The College of Nursing - Sri Ramakrishna Institute of Paramedical Sciences held the Lamp Lighting Ceremony for the B.Sc Nursing 2020 batch recently. D Lakshminarayanaswamy, Managing Trustee, SNR Sons Charitable Trust presided over the ceremony. Dr Jaeny Kemp, Principal, GKNM Institute of Nursing was the Chief Guest. She spoke about the uniqueness and greatness of being a nurse.

She shared about the five C's - Compassion, Commitment, Conscious, Confidence and Competency as the secret and strength of the Nursing profession. She emphasized the importance of Lamp Lighting and taking the oath, as an affirmation of being committed to the Nursing profession.

## Tata AIA Life opens branch in city!

The Covai Mail

Tata AIA Life Insurance (Tata AIA Life), one of India's leading Life Insurance Companies is adding 6 new branches to expand its distribution reach across the state of Tamil Nadu.

Through this expansion, the Insurer will expand its reach significantly in over 6 important locations such as Hosur, Kancheepuram, Adayar, Coimbatore RS Puram, Ponamalee, and Tiruppur.

The Insurer currently has over 218 branches across 25 states and 175 cities of the country, while having a strong presence in the agency, broking, bancassurance, assisted purchase and online space.

The step is part of Tata AIA Life's business growth strategy to expand its distribution as well as customer connect points and contribute to industry efforts towards increasing life insurance penetration in the state of Tamil Nadu. The expansion is expected to contribute to significant growth.

Each branch has been enabled with digital solutions and processes to facilitate contactless customer service and paperless operations. Customers can interact with branch officials through video calls or if visiting the branch, can avail of a self-service digital kiosk, to get their needs serviced and queries addressed. Such digitization of physical branches will also help in sustaining physical distancing protocols.

## Christmas fragrance fills HICAS!



*The students of Catering Department during the fruits mixing ceremony.*

The Covai Mail

The delicious aroma of the Christmas season is here, and its sweetness was pretty much evident at the annual fruit mixing ritual for making Christmas Cakes, organized at HICAS -Hindusthan College of Arts and Science by its Catering and Hotel Management Department recently.

Close to 40 kgs of 12 varieties of dry fruits and nuts were mixed with a generous amount of Rum and other alcohol to give a strong flavor. The mixture will be put away till it is a week before Christmas, and it will be used for baking cakes and puddings.

Joseph Lawrence, Bakery Consultant, JM Bakers Academy was the Chief Guest of the occasion. The catering students did the mixing in the presence of Prem Kanna, the HoD and Sebastian, Asst. Professor of the Department. A source shared that the cakes will be baked and provided to the Departments' Heads at the college and to other bakers.

Speaking about the entire stakeholders of the food industry, the Chief Guest said "This Industry can be called the second line of defence in the country." He shared the crucial role played by the food makers during the lockdown induced by the covid-19 pandemic. He said the members of the food industry acted like soldiers, as they sacrificed their leisure hours to support the community. He appreciated HICAS for providing 1 lakh food packets to the needy during the lockdown.



Prem Kanna

Talking about Skills in general, Mr.Lawrence said the Government of India had introduced the Skill India initiative to provide skill training to vast no. of youth and reduce unemployment prevailing in the country. Hundreds of skills essential for the development of the nation and individuals were identified, and training is provided by govt. recognized experts.

Mr.Lawrence, himself is a mentor to trainees who pick skill development programs in Bakery sector. He shared that in 30 days, essential knowledge about baking is provided in the training. Once the training is over, the skill level of the trainee is assessed, and a certificate from National Skill Development Corporation is provided. He said there are ample opportunities available in this field. "The successful candidates' skills will be registered with the government. Any baker from anywhere between Jammu & Kashmir and Kanyakumari, who wants new recruits can just visit the government's portal, and easily hire the person he finds suitable. Or, a person can become an entrepreneur and start his own bakery. There are opportunities for that also. They can get Mudra loan from the government and start their own concern", he said.



## Exhibition on Skin Donation to create public awareness



*Dr.Raja Sabapathy explaining the exhibits to the guests Dr.V.Bhattachariya, Head of Plastic Surgery Dept. at Banaras Hindu University and Dr.Lakshmi, Head of Plastic surgery Dept., Osmania Medical College, Hyderabad.*

The Covai Mail

At least 2 pairs of eyes are donated in Coimbatore daily whereas only 4 come forward to donate skin in a month. In India, only 2% of skin needed to help patients are received as donations.

On National Organ Donation Awareness Day, Ganga Hospital arranged an exhibition on Skin Donation through which every aspect of skin donation was elucidated for the benefit of the public.

The exhibition answers question like 'Who would need the skin?', 'who can donate skin?', "how is the donated skin collected?', 'will there be any disfigurement following the donation?', etc. through neat illustrations and models. It has answers to all thoughts that would arise in minds of people when thinking of becoming a skin donor. The exhibition was open for one week.

Dr.Shanmuganathan and Kanakavalli Shanmuganathan, Founders, Ganga Hospital inaugurated the exhibition in the presence of Dr.Raja Sabapathy, Director and Chairman of the Division of Plastic Surgery of Ganga Hospital.

Dr.Raja Sabapathy shared that a serious-burn victim needs new skin asap, so that the injured/ burnt regions of the body can be given protection from infection, the pain could be alleviated and the covering also acts as a temporary dressing but is vitally important for the patient's own skin to regenerate.

He said that anyone who has passed away can donate skin within 6 hours after death. Only those who had serious infections and communicable diseases are deemed ineligible for donation. Only about 0.3mm thickness of skin is removed from thighs, legs and back of the donor, and there will not be any bleeding. He emphasized that there will not be any deformity to the donor. The harvested skin will be verified and then processed. The doctor conveyed that processed skin will have a shelf-life of upto 5 years.

It must be mentioned that Ganga Hospital runs one of South India's largest skin banks, and it supports an additional number of burn victims in more than a dozen hospitals who need skin. Dr.Raja Sabapathy requested people to think about becoming skin and eye donors. He said the hospital's team would come in person to the departed person's house to harvest the skin and would complete the process in 45 mins.

For info regarding skin donation, dial 9865911234.

## YWCA recognizes Women-achievers!




*Young Women's Christian Association (YWCA) Coimbatore held its Annual Public Meeting recently, in which it felicitated Four Women for their excellent work and presented them with the award -Achiever of the Year 2021. The Chief Guest of the program was Rtn. S Swaminathan, President of Rotary Club, Coimbatore. The meeting was presided by the YWCA President Selina Augustine. The association also conducted a Drawing Competition for the school children on the theme 'Woman in Distress', and it awarded the prizes for the best paintings.*

## Erode boy wins big in Covai !

The Covai Mail

CM. Srivarshan (Erode) and V. D. Methini (Coimbatore) clinched the boys and girls singles titles in the Tamil Nadu State U 19 badminton championship at the Rak's Sports Arena courts.

For Srivarshan, it's his maiden State title. The youngster from Bhavani has been waiting for this day for a long. And, when he reached the final, he grabbed it with both hands to defeat K. Abhinaav (Chennai) 21-8, 21-7 to emerge the champion.

"Right through the championship, my plan was to dominate and I did just that. I have been waiting for this breakthrough and when it came my way, I executed my plans accordingly," he said after the title win.

Methini brought cheer for the host defeating top seed v.s.jayani (Thiruvallur) 21-18, 21 – 9. The former was able to coast through as she had played the latter several times before. I was able to read her game quickly and converted it into a win, which is very important as I had put in lots of hard work, she said.

The District Collector, Coimbatore, Dr. G.S. Sameeran, gave away the prizes, V.E. Arunachalam, the TNBA Secretary, & Swetha Krishna Murthy Founder director Rak's Pallikoodam was also present.

## ELGi's challenge promotes fitness culture

The Covai Mail

The 3rd edition of Elgi Equipments' annual #whatsyourfinishline challenge was conducted across the globe during the second half of November 2021.

The #whatsyourfinishline challenge has historically focused on promoting an active lifestyle among ELGi employees and other stakeholders in addition to raising awareness about physical and mental well-being, all while delivering an exciting experience for every participant.

It promotes fitness as a means to ward off lifestyle related diseases and promote cancer awareness. The challenge usually prompts every ELGi employee, distributor, customer, supplier and the community at large to set their own fitness goals, come together and achieve them.

This year the 3rd edition saw the inclusion of five daily challenges, which encouraged all participants to compete and excel in time-bound activities ranging from push-ups, burpees, planks, crunches, and jumping jacks.

A press release said that despite the continued hurdles of the pandemic, the challenge saw 103 teams from 22 countries clocking over 42,500 miles over a fortnight, celebrating ELGi's spirit of resilience amid the global pandemic.

Elgi Equipments will power the 9th edition of the Coimbatore Marathon, to be held virtually in December 2021. All proceeds from the marathon will go to the Coimbatore Cancer Foundation, which in turn greatly augments its efforts to raise cancer awareness, besides improving cancer patients' and caregivers' health and well-being.

## AIC Raise's startup gathers Rs.1.6 cr fund

The Covai Mail

Buyofuel, a startup incubated at Atal Incubation Centre Raise in Rathinam Institutions raised Rs 1.6 Crores in Seed Round led by Inflection Point Ventures.

Founded by KishanKarunakaran, Sumanth Kumar, and VenkateswaranSelvan, Buyofuel has a registered user base of more than five hundred, Buyofuel is India's first online platform for the biofuels industry, connecting raw material aggregators, biofuel manufacturers, fuel consumers, and waste generators all in one app.

Buyofuel aims to become the single largest player in the biofuel industry in India, in terms of sourcing for both biofuel manufacturers and consumers. The funds they have raised would be used for strengthening more on their technology, onboarding new partners for developing their business and marketing activities.

The company's users include industry giants such as Ultratech Cements, Ramco Cements, Thermax, and Valeo. They have the capacity to supply more than a thousand metric tonnes of organic waste, eight hundred metric tons of solid biofuels, and more than eight hundred kilolitres of biodiesel.

Moving towards cleaner energy not only reduces the ill effects on the environment but also bolsters the journey in making India a trillion-dollar economy, said Ankur Mittal, Co-founder of Inflection Point Ventures. Inflection Point Ventures helps entrepreneurs to connect with diversified investors and provides experiential and monetary capital.

To ADVERTISE IN THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

## Sankara mixes Nuts, Dry Fruits & Love for X-Mas



*From Left: The Members of Sankara Institutions' management T.R.Kalyanaraman, Sandhya Ramachandran, Nithya Ramachandran, V.Radhika, Principal, Sankara CAS at the ceremony.*

The Covai Mail

The Department of Catering Science and Hotel Management of Sankara College of Science and Commerce organized the Christmas Cake Fruit Mixing Ceremony on Tuesday.

Bernard Edward, Vice Principal of the college said that the ceremony marked the arrival of the harvest season. During that time lots of fruits and nuts would be harvested before the winter season and these seasonal fruits and nuts go into the preparation of the traditional Christmas fruit cake.

They are saved up for the mix for the coming year with the hope that it would bring another abundant year.

Sandhya Ramachandran, Joint Secretary, Sankara College of Science and Commerce, T.R.Kalyanaraman, Joint Secretary, Sankara Institute of Management Science, Nithya Ramachandran, Deputy Joint Secretary, Sankara College of Science and Commerce, V.Radhika, Principal, Bernard Edward, Vice Principal, Heads of various departments, faculty members and students took part in the ceremony.

The program was organized by Chef. Anandaraj P, Head of the department and his team members.

RNI Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from #2-F, Trishank Apartment, G.K.D Nagar, Nethaji Road, Papanaikenpalayam, Coimbatore - 641 037 and Printed at Newsmen Associates Limited, #1, Sidco Industrial Estate, Kurichi, Coimbatore - 641 021. Editor: C.Srinivasan

# THE COVAI MAIL

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 8 Issue No. : 36 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Dec 5-11, 2021, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-




# Continuing the fight against Cervical Cancer!

The Covai Mail

There are two types of cancer that haunt women specifically, they are Breast Cancer and Cervical Cancer. While the former cannot be prevented, the case is not the same for Cervical Cancer.

There is a vaccine for it, with which the cancer can be avoided. Hence medical organizations and stalwarts of the healthcare sector like Rao Hospital in Coimbatore have been continuously creating awareness about it, so that lives could be saved.

The data from WHO shows that in India a woman dies of this disease every eight minutes. In 2018 alone, close to 100,000 new cases were diagnosed in India and 60,000 women died from it. Today, it causes the second-highest cancer-related deaths in Indian women.

Cervical cancer develops in a woman's cervix, and the main cause of this cancer is due to a virus called Human Papillomaviruses (HPV), an extremely common virus transmitted through sexual contact.

Gynec-oncologists who deal with Cervical cancer say that majority of patients with these cancers come for treatment when the disease has reached its third or fourth stages.

So the prevention and early detection aspect needs to be conveyed to larger number of women. If the life-saving vaccine is administered between 11-12 years of age, then the risk of cervical cancer in a woman is cut down to a phenomenal level.

While the HPV vaccination is the first defence against this disease, secondary prevention approaches like screening after 35 years of age will prevent cervical cancer risks.

Even if a woman is not vaccinated and has crossed the suitable age for vaccination, a pap smear test can help her find whether she is at risk. So timely administration of vaccine and check up after 40 years of age is very much essential for every woman.

Being one of the leading women health care providers, Rao Hospital understands the necessity of spreading awareness for Cervical Cancer.

Recently the hospital announced that their entire team took an oath this year to continue striving to fight cervical cancer by being at the forefront through our community awareness programs for HPV vaccination & preventive screening for early detection of cervical cancer.

Rotary Clubs, many leading hospitals in Coimbatore are creating programs like this, and it is a good sign that Covai is showing the way to others.

During an exclusive interview with The Covai Mail for Doctors Day 2021, Dr.Asha Rao, MD of Rao Hospital & Care emphasized that she feels that there is much work to be done in creating awareness about cancers that affect women.

She added that through the Meera Sharadha Foundation, they are engaged in organizing various awareness programs about cancer prevention.



*Dr.Asha Rao, MD, Dr.Damodar R. Rao, Associate Director, Rao Hospital & CARE (left) and other members of the hospital team with the Teal and White badge.*

## Pillar-129

# A fresh Drive-in restaurant experience!

David Karunakaran
The Covai Mail

Nikvin Hospitality Services Private Limited is all set to launch Pillar-129, a drive-in restaurant within the city premises on December 6 (Monday).

The Managing Director of the company, Mohan Chandar in a press meet held on Thursday conveyed that it is a 49 cents (21000+ sq.ft) property built at Avinashi Road, adjacent to National Model School area.

Noticing that the 129th pillar of the Avinashi Road Flyover is close to the restaurant, the management of Nikvin felt that it would be a permanent landmark, and decided to name their establishment as Pillar-129.

While Mohan Chandar is widely known in Tamil Nadu as an ace academician, his role in the food industry was news to many. His company Nikvin has more than 10 years of experience in hospitality sector. The company runs a restaurant by the name *Virundhombal* in Siddhapudur since 2016, and with the upcoming launch of Pillar-129, the brand aims to make a big impression.

The dining area of Pillar 129 is 2000 sq.ft. There is also a separate dining area with AC that can seat 80 people. The drive-in can accommodate 24 cars at once. The area is surrounded by Coconut trees and it will be a pleasant green area with shade for patrons. The Multi-cuisine restaurant will be operational between 11 am to 11 pm.

